# இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள் காட்டும் அறநெறி

முனைவர் கி.முருகேசன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி (தன்.)
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர் – 641048.
மின்னஞ்சல் : muruganthirukkural@gmail.com

3

**ஆய்வுச் சுருக்கம்**

உலகப் பொது வாழ்வியலுக்கு அப்பாற்பட்டு இயற்கைசூழ் வாழ்க்கையை அமைத்துக் கொண்டும், தனக்கென சில கோட்பாடுகளை வகுத்துக் கொண்டும் வாழ்ந்தவர்கள் சித்தர்கள் என்பது தெரியவருகின்றது. சித்தர்களில் முதன்மையானவர்கள் பதினெட்டு பேர் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களைத் தவிர இன்னும் நிறைய சித்தர்கள் வாழ்ந்ததாக சிலத் திறனாய்வாளர்கள் கூறுவர். பதினெண் சித்தர்களில் இடைக்காட்டுச் சித்தரும் ஒருவராக இடம் பெறுகின்றார். இவரின் வரலாறு அறியக் கிடைக்கவில்லை. இவருடைய பாடல்களில் இடம் பெறும் கருத்துக்களைக் கொண்டு, ஒருசில வாழ்க்கைக் குறிப்புகளை அடையாளம் காணமுடிகின்றது. இவர்தம் பாடல்கள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களிடம் பேசுவது போன்ற தோரணையில் அமைந்துள்ளன. ஆத்மநெறியும், இறைவனிடம் ஒப்படைக்க வேண்டிய ஆன்மாவைப் பேணிக் காப்பதையும் பல செய்யுள்களில் குறிப்பிடுகின்றார். உலகப் பற்றுகள் அனைத்தையும் நீக்கி, சிவகதியை அடைய வழியமைத்துக் கொடுக்கின்றார். அறநெறிக் கல்வியின் பண்புகளை எளியமுறையில் விளக்குகிறார். நிலையில்லா இவ்வுலகம் ஒருநாள் அழியும் என்றும் நற்கதியே சரணம் என்றும் போற்றுகின்ற பண்பு சிறப்பிடம் பெறுகின்றது.

**திறவுச் சொற்கள் :** சித்தர்களின் வாழ்வு, ஆன்மநிலையில் ஆத்மா, சிவகதியே சரணம், பற்று நீக்கி வாழ்தல், அறநெறியில் மெய்யறிவு, நிலையாமைத் தத்துவம்.

**முன்னுரை**

மானுட வாழ்வியலில் ஒரு மனிதன் உன்னத நிலையை அடைய வேண்டுமென்றால், அவனுக்கு மன அடக்கம் இன்றியமையாத ஒன்றாகும். மனம் செல்லும் வழியிலெல்லாம் தன் வாழ்வை நடத்தாமல், அதனை இழுத்துப் பிடித்து அடக்கி ஆள்பவனுக்கே இவ்வுலகம் சொந்தமாகிறது. செய்கின்ற செயல்களில் நிதானமும் பக்குவமும் அவசியமாகிறது. அதற்குப் புனிதமான வாழ்வியல் நெறிகளைக் கையாண்ட தமிழ்ச் சான்றோர்களாகிய சித்தர்கள் வழிகாட்டுகின்றார்கள். ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று தீயக் குணங்களை எவன் ஒருவன் விட்டுவிட்டு, அறநெறியில் வாழ்கிறானோ, அவனே முத்தி பெறமுடியும் என்று

கூறுகின்றார்கள். சித்தர்களின் வாழ்க்கைமுறை எதனையும் எதிர்பாத்து, அதற்காக நேரத்தையும் உடலையும் வீனடித்ததாகத் தெரியவில்லை. வாழ்கின்ற ஒவ்வொரு நாளையும் ஆன்மாவின் நோக்கத்திற்காக செலவழித்தனர். இவர்களின் இலக்கியத் தன்மையும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. சித்தர்களில் இடைக்காட்டார் பாடல்கள் வழி அறியலாகும் அறநெறி கருத்துக்களை வெளிக்காட்டுவதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

**சித்தர்கள் யார்?**

சித்தர்கள் இயல்பான மானுட வாழ்வியலில் இருந்து வேறுபட்டவர்கள். பொது வாழ்வியலுக்கு உடன்படாதவர்கள். தங்களுக்கென தனி வாழ்க்கைமுறைகளை வகுத்துக் கொண்டு இயற்கையோடு இயற்கையாய் வாழ்ந்தவர்கள். சித்து விளையாட்டுக்களிலும் கூடு விட்டு கூடு பாயும் வித்தைகளையும் கற்று இருந்ததாக அவர்களின் வாக்கையை உணர்ந்தவர்கள் கூறுகின்றனர். அதற்கு அவர்கள் அமைத்துக் கொண்ட வாழ்வியல் நெறியே முக்கியக் காரணமாகும். மருத்துவம், கணிதம், இரசவாதம், தத்துவம், இலக்கியம், ஆத்மீக ஈடுபாடுகள் இவர்களின் உலக ஞானத்திற்கான பண்புகளாய்ச் சொல்லப்படுகின்றன.

“உள்ளம் என்பது மிகமிக மென்மை பொருந்திய ஓர் அறையாகும். அந்த அறைக்குள்ளே அன்னிய ஆற்றல்கள், தீய சக்திகள் புகுந்து விடாதபடி பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, ஒழுக்கமுடைமை போன்ற சில மன நெறிமுறைகளை ஞானிகள் எடுத்துக் கூறுவார்கள். இது உள்ளம் என்ற அக வீட்டைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிற பகுதியாகும். எனவே இந்த உடம்பாகிய கோயிலை இறைவன் வாழ்வதற்குரிய பரிசுத்தமும், புனிதமும் நிரம்பிய மகத்தான கோயில் போன்று பாதுகாக்க வேண்டுமென்று, அழுத்தம் திருத்தமாகச் சித்தர்கள் கூறுவார்கள்” **(மீ.ப.சோமசுந்தரம், சித்தர் இலக்கியம், ப.168).**

பரம்பொருளாகிய இறைவனைத் தன் உடம்பினுள்ளே காணுவதற்கு பல ஆண்டுகள் ஆனாலும், மோன நிலையிலேயே பல சித்தர்கள் இருந்தார்கள் என்றும், சிலர் அதனை காணாமல் தேடி, ஓடி அழைந்தார்கள் என்றும் சிவவாக்கியர் தம் பாடலொன்றில்,

**“ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே” (பா.4)**

என்று பதிவு செய்கின்றார்.

அறிவுக்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவனார் **“மெய்ப்பொருள் காண்பது அறிவு”** என்று குறிப்பிடுகின்றார். இந்த மெய்ஞானத்தின் நிலையறிந்து இலக்கணமாக வாழ்ந்தார்கள் சித்தர்கள் எனப் புரிகின்றது. சித்தர்கள் சிவகதியை அடைவதற்கான வழிகளை மட்டுமில்லாமல், வாழ்வியலுக்குத் தேவையான உலக நெறிகளையும், மருத்துவம், வானவியல், மாந்திரிகம்,

புவியியல், சோதிடம், கணிதம், கைரேகை போன்ற பல்வேறு துறைகளையும் சார்ந்தவர்களாக இருந்தமைக்கு அவர்கள் இயற்றிய இலக்கியங்கள் சான்றுகளாய் அமைகின்றன.

**இடைக்காட்டுச் சித்தர்**

இடைக்காடு என்பது ஊர்ப் பெயரைக் குறிக்கும் சொல்லாகும். இப்பெயரில் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஒன்றியத்தில் இடைக்காட்டூர் என்ற பெயரில் ஒரு கிராமம் இருக்கிறது. இதனைப் போன்றே தஞ்சை மாவட்டத்தின் பேராவூரணி ஒன்றியத்தில் இடையன்காடு என்ற பெயரில் ஒரு கிராமம் இருக்கிறது. சிலர் இவரது ஊர் கேரளா மாநிலத்தில் உள்ளது என்றும் அதற்கு இடைக்காடு என்ற பெயரும் உண்டு எனவும் கூறுகின்றனர். இவர் இடையர் சமூகத்தில் பிறந்ததாலும் ஆடு மாடு மேய்த்துக் கொண்டு காடுகளில் திரிந்தவராக இருக்காலம் என்றும், அதனால் இடையன் + காடு என்பதனால் இப்பெயர் இவருக்கு வந்திருக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றனர். இடைக்காட்டார் திருவண்ணாமலையில் ஜீவசமாதி அடைந்தாகவும் அவருக்கு அங்கு கோயில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. முறையான வரலாற்றை அறிவதற்கு போதிய ஆதாரம் இல்லை என்பது உண்மையாகும்.

இருப்பினும், "புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்திலுள்ள இடைக்காட்டூர் கிராமத்தில் சித்தர் கோயில் ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது" **(தினமணி நாளிதழ், 30.09.2021)**. இதனைப் போன்றே அதேநாளில் திருவண்ணாமலையிலும் பூசைகள் நடைபெறுகின்றன. ஒருவேளை திருவாதிரை நட்சத்திரம் இவர் பிறந்த நட்சத்திரமாக இருக்கலாம் என்று தெரிகிறது. இவர் வாழ்ந்த காலம் சங்ககாலம் என்றும், கி.பி.10-15 நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் முரண் பட்ட கருத்துகள் நிலவுகின்றன.

இடைக்காட்டார் பாடல்கள் மொத்தம் 130 கண்ணிகளாக அமைந்துள்ளன. இவற்றில் தாண்டவக் கோனே, நாராயணக் கோனே, ஊது குழலே, பால் கற, ஆடு, மாடு, அன்னம், மயில், வண்டு, குயில், அறிவு, நெஞ்சம் போன்றவைகளைக் குறிப்பிட்டு பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. இதனைக் கொண்டு இவர் முல்லை நிலத்தில் வாழ்ந்தவர் என்று உணரமுடிகின்றது. முல்லை நிலக் கடவுளாகிய திருமாலின் மீது இவர் பற்று கொண்டவராகவும் இருந்தார் என்பது ஒரு கதையால் விளங்குகிறது. இதனை,

"திருமாலின் பத்து அவதாரங்களில் சிறந்தது எது எனக் கேட்டபோது இவர் 'ஏழை இடையன் இளிச்ச வாயன்' என்று பதில் சொன்னாராம். அதாவது, ஏழ்மையான இடையனான இந்த இளிச்ச வாயனுக்கு என்ன தெரியும்? என்று பொருள் கொள்ளலாம். மேலும், இதற்கு பொருத்தமாக மூன்று அவதாரங்களில் சிறந்தது எது என்பதை,

**‘காடு செல்லும் ஏழைபோல் நடந்த இராமன்**

**இடையரால் வளர்க்கப்பட்ட கண்ணன்**

**வாய்திறந்து சிரித்தபடியான நரசிம்மம்’**

என்று முனைவர் சு.அறிவொளி குறிப்பிடுகின்றார்” (சித்தர் இலக்கியம் மூலமும் உறையும், ப.1066).

**இறைநெறி தத்துவம்**

இறைவன் மிகப் பெரியவன். அவனது உறைவிடம் யாதென்று அறியாததால் அவனை நம் உடலுள்ளே இயங்கும் ஆத்மாவகக் காணவேண்டும் என்பதே சித்தரின் பாங்காகும். பிறவியாகியப் பெரிய கடலை நீந்திக் கடக்கின்ற ஒருவனால் மட்டுமே பிறப்பின் நற்பலன்களை அடையமுடியும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனை,

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**

**இறைவன் அடிசேரா தார்”** **(குறள்.10)**

என்ற குறட்பா விளக்குகின்றது.

பாலில் சுவையும் பழங்களில் இனிமையும் நூல்களில் பொருளும் எப்படி நுண்மையானதாக அமைந்திருக்கிறதோ அதைப்போல, இறைவனும் நுண்பொருள் என உணர்ந்து போற்ற வேண்டும் என்று இடைக்காட்டுச் சித்தர் குறிப்பிடுகின்றார் **(பா.50)**.

எள்ளுக்குள் இருக்கும் எண்ணெயைப் போன்று எங்கும் நிறைந்து காணப்படுகின்ற இறைவனை உள்ளத்தில் உணர்ந்து வணங்கினால் ஆத்ம நிலையை அடையமுடியும் என்பது சித்தரின் வாக்காக உள்ளது என்பதை,

**“எல்லில்தை லம்போல் எங்கும் நிறைபொருளை**

**உள்ளில் உதித்தே யுணர்வடைந்து போற்றீரே” (பா.56)**

என்ற பாடல் குறிப்பிடுகின்றது.

எல்லா உலகங்களையும் உலகத்தில் வாழக்கூடிய உயிர்களையும் உயிரற்ற எல்லாப் பொருள்களையும் படைத்தது யாரென்றால்? எண்ணிப் பார்க்கமுடியாத வல்லமை பொருந்திய ஆதீ பரமசிவனின் சொல்லால்தான் இவையாவும் உண்டாகின என்று இடைக்காட்டார் குறிப்பிடுகின்றார். இதனை,

**“எல்லா வுலகமும் மெல்லா வுயிர்களும்**
**எல்லாப் பொருளு மெண்ணரிய**
**வல்லாளன் ஆதி பரம சிவனது**
**சொல்லா லாகுமே கோனாரே”** **(பா. 1)**

எனும் பாடல் வழியே அறிந்துகொள்ள முடிகிறது.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையின் தத்துவங்களை ஆன்மாவின் அமைப்பின் படி உள்ளுணர்ந்து அறிந்திருக்க வேண்டும். காலங்கள் பலகடந்தும் அனைத்து உயிகளுக்குமான சக்தி அவ்வுயிர்களின் உடல் அமைப்பின், உள்ளத் தூய்மையின் அடிப்படையில் பராசக்தியாக பரிணாமம் பெறுகின்றது. அதுவே வெற்றிக்கு காரணியாகவும் அமைந்துவிடுகின்றது. இதனை,

**"முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது**
**முத்திக்கு உறுதிகள் செய்யாக்கால்**
**சித்தியும் பக்தியுஞ் சக்தியும் முக்தியுஞ்**
**சேரா வாகுமே கோனாரே"** (பா.3)

என்று இடைக்காட்டுச் சித்தர் பதிவு செய்கின்றார். முத்தி (வெற்றி), பக்தி (அன்பு), சக்தி (பராசக்தி), முத்தி என்பதன் அடிப்படையில் இதனை விவரிக்கின்றார்.

எனது என்றும் யான் என்றும் தீயக் குணங்களை விரட்டி ஒட்டிவிட வேண்டும் என்று குறிப்பிடும் சித்தர் பெருமான். மனம் நெறிப்பட ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம் என்கிற மாட்டை முறுக்கிக் கட்ட வேண்டும் (பா.117) என்று கூறுகின்றார். அப்படி செய்தால் மட்டுமே இயற்கை என்னும் இன்பத்தை நுகரமுடியும். ஆணவம் என்பது ஆள்வதும், ஆளநினைப்பதுவும் ஆகும். கன்மம் என்பது இயற்கைக்கு எதிராகப் பாவச் செயல்களை செய்வது ஆகும். மாயை என்பது கற்பனையான வாழ்வில் உண்மை என்றுணர்ந்து மூழ்கித் திளைப்பதாகும். இப்படியாக இறைத் தத்துவங்களை ஆன்மாவோடு இணைத்துப் பேசுகின்ற சித்தர் மானுட வாழ்வுக்கு அறநெறியாக, இறையருளை ஆன்ம மனத்தால் கண்டுணர வேண்டும். தேகம் அழியாமல் நிலைபெற செபம், தவம், யோகம் இவைகளெல்லாம் செய்தால் மட்டும் போதுமா? என்று சிந்திப்பாயாக கல்மனமே என்று தனது நெஞ்சிற்கு அவர் எழுப்பும் கேள்விகள் நம்மை சிந்திக்க வைக்கின்றது. இதனை,

**"தேக மிழப்பதற்குச் செபஞ்செய்தென் தவஞ்செய்தென்**
**யோகமட்டுஞ் செய்தாலென் யோசிப்பாய் கல்மனமே"** (பா.65)

எனும் பாடலால் இடைக்காட்டுச் சித்தர் வெளிப்படுத்துகின்றார். இதன் மூலம் உடல் வேறு உயிர் (ஆத்மா) வேறு என்று பிரித்தறியும் சிந்தையடையவர்களாக சித்தர்கள் இருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது.

**பற்றறுத்தல்**

ஆன்மா உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதற்கான மிக முக்கிய வழி பற்று நீக்கி பகை மறித்து வாழ்தலே ஆகும். இறைவனால் படைக்கப்பெற்ற இவ்வுடல் எதன் மீதும் ஆசை கொண்டு, ஆகச் சிறந்த உடலை வருத்திக் கொள்ளக் கூடது. உடலுக்குள் இருப்பது

பரமாத்மா அதனை நல்வழியில் கொண்டு செல்ல வேண்டும். இவ்வுலகில் பற்றில்லாதவனாக இருப்பவன் இறைவன் ஒருவனே; அவனுடைய பற்றினை நாம் பற்றினால் முக்தி என்னும் அறிய செல்வம் நம் ஆத்மாவுக்கு இயல்பாகவே கிடைத்துவிடும். இப்பற்றினை,

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"** **(குறள்.350)**

என்று திருவள்ளுவனார் வெளிப்படுத்துகின்றார்.

மனித ஆற்றலுக்கு முக்கிய காரணியாக இருப்பது ஐம்புலன்கள். இதன் வழியே ஒவ்வொரு செயல்களும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. அவை, மெய், வாய், கண், மூக்கு, செவி என்பதாகும். இந்த ஐந்தாடுகளையும் அவை தருகின்ற ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனும் காடுகளை மேயவிடாமல் ஓட்டினேன் என்று சித்தர் குறிப்பிடுகின்றார். இதனை,

**"மெய்வாய் கண் மூக்குச் செவியெனும் ஐந்தாட்டை**
**வீறுஞ் சுவையொளி யூறோசை யாம்காட்டை**
**எய்யாம லோட்டினேன் வாட்டினேன் ....... "** **(பா.27)**

என்று சித்தர் அவர்கள் புலப்படுத்துகின்றார்.

மேலும், இறைவன் மீது பற்று கொண்டு வாழ வேண்டுமெனில், மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளையும் மற்றும் உலக ஆசைகள் அனைத்தையும் ஒழித்தோம் என்று வண்டிடம் (தும்பி) பேசுவது போல் அமைகின்ற பாடலொன்றில்,

**"மூவாசை விட்டோமென்றே தும்பீபற – பர**
**முத்திநிலை சித்தியேன்றே தும்பீபற**
**தேவாசை வைத்தோமென்று தும்பீபற – இந்த**
**செகத்தை யோழித்தொமென்று தும்பீபற"** **(பா.80)**

என்று இடைக்காட்டுச் சித்தர் பதிவு செய்கின்றார்.

கல் தூணைப் போல மனம் உறுதியாகட்டும். வருகின்ற இயமனைக்கூட தூரத்தில் ஓட்டிவிடுவோம். அகப் பற்றுக்களை சற்றும் இல்லாமல் செய்ய வேண்டும் என்று மயிலிடம் பேசுகின்றார். பேய் போன்ற இந்த மனமானது பெட்டிப் பாம்பாய் அடங்குமாறு ஊது குழலே என்று புல்லாங்குழலிடம் பேசுகின்றார். பொய்யான பற்றுகளை விட்டுவிட்டு மெய்யான பொருட்களை ஐம்புலனும் விருப்பங்கொண்டு போற்றுமாறு செய்வீரே என்று பணிக்கின்றார். பேய்க் குரங்கைப் போல ஆழி சூழ்ந்த இவ்வுலகில் தம் மனதில் ஆசை வைத்துக் கொண்டு நாய், நரிகள் போல் அலைந்தால் நன்மை உண்டோ? கிடையாது. அதனால் பற்றறுத்து வாழ்தலே சிறப்பு என்பதனை,

**“பேய்க்குரங்கு போலப் பேருலகில் இச்சைவைத்து**

**நாய்நரிகள் போலலைந்தேன் நன்மையுண்டோ கல்மனமே” (பா.62)**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

**அறநெறிக் கல்வி**

மானுட வாழ்வில் சிந்தனைக்கு தெளிவு கொடுப்பது அறிவு ஆகும். அந்த அறிவாற்றலை பெறுவது இன்றியமையாத ஒன்றாகும். இரண்டு கண்கள் இருந்தாலும் கல்வி அறிவு பெற்றிருந்தால், அதுவே மெய்ஞ்ஞானத்தின் கண்களாக வெளிச்சம் தரும். அதனாலேயே திருவள்ளுவர் **“கண்ணுடையார் என்பவர் கற்றோர்”** (குறள்.393) என்று கூறுகின்றார். அறிவு ஒன்றே அழிவில்லா அனைத்தையும் ஆக்கப்பூர்வமாக ஒருவனுக்கு கொண்டு வந்து சேர்க்கும் முக்கியக் கருவியாகும். **“இளமையில் கல்” (ஆத்தி.29)** என்றும் **“கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” (மூதுரை, பா.26)** என்றும் ஔவையார் குறிப்பிடுவதிலிருந்து கல்வியறிவின் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. இடைக்காட்டுச் சித்தர் கல்வியின் நெறியை தம் பாடல்களில் தெளிவாகப் பதிவு செய்கின்றார்.

பொய்யான கல்வியைக் கற்றுப் பொருளில் குழப்பம் அடையாமல் மெய்யான ஞானக் கல்வியை விரும்பி ஏற்றுக் கொள்வாய் என்பதனை,

**“பொய்யான கல்விகற்றுப் பொருள்மயங்கங் கொள்ளாமல்**

**மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கல்மனமே” (பா.61)**

என்று தன்னுடைய நெஞ்சுக்குச் சொல்வதுபோல் பதிவு செய்கின்றார்.

மேலும், இன்னும் ஒருபடி மேலே சென்று, தான் கற்ற கல்வியால் மட்டும்தான் சாகாமல் இருக்க முடியும். ஆகவே கல் போன்று இருக்கும் மனமே! நீ எனக்கு வாகான மெய்ஞான கல்வியைக் கற்றுக் கொள்வாயாக என்று வலியுறுத்துவதை,

**“சாகா திருப்பதற்குத் தான்கற்ற கல்விய ன்றோ**

**வாகான மெய்க்கல்வி வகுத்தறி நீ கல்மனமே” (பா. 66)**

என்ற செய்யுளால் அறியமுடிகின்றது.

அறிவு என்பது கல்வி என்று எளிதில் கூறாமல், அதன் உள்ளர்த்தங்களையும் உறுதிப்பாட்டையும் சித்தருக்கே உண்டான பாணியில், அக்னியால் பஞ்சு மூட்டை அழிந்து போவதுபோல், பகுத்தறியும் நல்லறிவால் பாவம் போகும் என்று கூறுகின்றார். இதனை,

**“அக்கினியால் பஞ்சுபொதி அழிந்திட்ட வாறேபோல்**

**பக்குநல் லறிவாலே பாவம்போம் மடவனமே” (பா.92)**

எனும் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன.

மேலும்,

**“காற்றின் மரமுறியுங் காட்சியைப்போல் நல்லறிவு**
**தூற்றிவிடி லஞ்ஞானந் தூரப்போம் மடவனமே” (பா. 91)**

என்ற பாடல் வழியே காற்றினால் மரம் முறியும் காட்சி போல நல்லறிவு தூற்றினால் அஞ்ஞானம் தூரப் போகும் என்று இவர் கூறுவதிலிருந்து, மெய்ஞ்ஞானக் கல்வியை வலியுறுத்துகின்ற தன்மை தெரிய வருகின்றது.

**நிலையாமைத் தத்துவம்**

உலகத்தில் இயங்கும் ஒவ்வொரு உயிருள்ள மற்றும் உயிரற்ற எந்த ஒன்றும் நிலையானது அல்ல. அது ஏதோ ஒருநாள் இல்லாமல் போய்விடும். இந்தத் தத்துவத்தை உணராத பலர் வாழ்க்கையின் உண்மையினை அறியாமல் பூமியில் சிலகாலம் தங்கிவிட்டு மறைந்துவிடுகின்றனர். இந்த வேடிக்கை மனிதர்களைப் போல எவரொருவரும் ஆட்கொள்ளாமல், உலகத்துள் நிலையானது என்று ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து, நற்செயல்களில் ஈடுபட வேண்டும் என்பது ஞானிகளின் தத்துவக் கோட்பாடாகும். அந்தவகையில் நிலையாமைத் தத்துத்தினை நமது முனோர்கள் இலக்கியங்களின் மூலமாக பல்வேறு நிலைகளில் பதிவு செய்துள்ளனர். **“புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை” (நாலடி.பா.29 )** என்று புல்லின் நுனியில் உள்ள நீர்த்துளிப் போன்றது நிலையாமை, ஆதலால் யாக்கையும் நிலையில்லாதது என்று நாலடியார் குறிப்பிடுகின்றது. இடைக்காட்டுச் சித்தர் பாடல்களில் நிலையாமைக்கான தத்துவக் கூறுகள் மிக எளிய நடையில் விளக்கப்படுகின்றன.

**“மாடும் மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்**
**வீடும் மணிகளும் வெண்பொன்னும் செம்பொன்னும் வெண்கலமும்**
**காடுங் கரைகளுங் கல்லாம் பணியும் கரிபரியும்**
**தேடும் பலபண்டம் நில்லா ..............................” (பா.23)**

என்ற பாடலில் மாடு, மனை, மக்கள், சுற்றம், பெரிய செல்வம், வீடு, மணிகள், வெள்ளி, தங்கம், வெண்கலம், காடுகரை, கல் நகைகள், யானை, குதிரை, தேடக்கூடிய பல பண்டங்கள் முதலிய அனைத்தும் நிலையானவை அல்ல என்பதை உணரவேண்டும் என்று பதிவு செய்கின்றார்.

மேலும், இரும்பை இழுக்கும் காந்தத்தின் தன்மைபோல பல பொருள்களையும் விரும்பினதாலே அது நிலையான பொருளாக மாறிவிடுமோ என்று தன் நெஞ்சை கேள்வி கேட்கும் சித்தரின் பண்பு உலகப் பற்றின்மேல் அவருக்கு இருக்கும் வெறுப்பு தெரியவருகின்றது. இதனாலேயே வண்டிடம் (தும்பி) அவர் பேசுகின்ற போது,

**“எப்பொருளுங் கனவென்றே தும்பீபற – உல**
**கெல்லாம் அழியுமென்றே தும்பீபற**
**அப்பில்எழுத்து உடலென்றே தும்பீபற**
**...........................................................” (பா.82)**

என்ற பாடலின் மூலம் இவ்வுலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் கனவாகும். இந்த

உலகமும் ஒருநாள் அழியும் இவ்வுடலும் நீரில் எழுதிய எழுத்துப் போன்று காணாமல் போகும். ஓவியத்தின் நிழல் நீரில் தெரியும் போது ஒரு சிறு தவளை கலக்கினாலும் மறைந்து போகும். வானத்தில் மேகம் கலக்கினால் மதியானது மறைந்து போகும் என்பதை உணர்ந்து வாழவேண்டும்.

**முடிவுரை**

மேற்கண்ட கருத்துக்களை உற்று நோக்கினால் சித்தர்களின் வாழ்க்கை முறை பொது வாழ்விலிருந்து வேறுபட்டிருப்பதையும், அச்சித்தர்களில் இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களில் பொதிந்துள்ள ஆன்மநெறி, இறைத் தத்துவம், மானுடவாழ்வில் பற்று கொள்ளாமல் ஆன்மாவின் மீது பற்று கொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் அறநெறியில் கற்றலின் சிறப்பையும், நிலையில்லா வாழ்வின் தத்துவங்களையும் எளிய நடையில் வாழ்வியலுக்கு அவர் கூறும் பொதுவான அறநெறிகளும் சித்தரின் புலமைக்குச் சான்றாக அமைகின்றன.

**ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள் :**


1. முனைவர் அ.அறிவொளி (உ.ஆ.), - **சித்தர் பாடல்கள்** மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை – 17, மறுபதிப்பு:2007.
2. அருணன், - **தமிழரின் தத்துவ மரபு**, வசந்தம் வெளியீட்டகம், சிம்மக்கல், மதுரை – 1, முதற் பதிப்பு:2004.
3. இராம லட்சுமணன் (ப.ஆ.), - **நீதி நூல்கள்**, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை – 1, பத்தாம் பதிப்பு:2007.
4. மீ.ப.சோமசுந்தரம், - **சித்தர் இலக்கியம்**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் – 2, இரண்டாம் பதிப்பு:2004.
5. எம்.நாராயண வேலுப்பிள்ளை (ப.ஆ.), - **திருக்குறள்**, நர்மதா பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை – 17, முதற் பதிப்பு:2013.
6. அ.மாணிக்கம் எம். ஏ., (உ.ஆ.), - **நாலடியார்**, மணிவாசகர்ப் பதிப்பகம், பாரிமுனை, சென்னை – 108, ஐந்தாம் பதிப்பு:2010.